## திராவிட இயக்க இதழ்கள் - 'பெரியார் இரா'




தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைகளைத் தொகுத்து வே.ஆனைமுத்து அவர்களால் நடத்தப்பட்ட ஆங்கில இதழ் 'பெரியார் இரா' (Periyar Era).

1994-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் வெளிவந்த இது, மாத இதழாக மலர்ந்தது. சுமார் 15 ஆண்டுகள் இந்த இதழ் வெளி வந்துள்ளது. இதழின் முகப்பு அட்டையில், அந்த மாதத்தில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. இதழின் பெயருக்குக் கீழே, 'The International Magazine' என்று அச்சிடப்பட்டுள்ளது.

இந்த இதழில், ஈழத்தமிழர் குறித்த செய்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஈழம் தொடர்பாக, சில சிறப்பிதழ்களையும் ஆனைமுத்து வெளிக்கொண்டு வந்தார்.

இந்த இதழில், அலசல் கட்டுரைகள் மட்டுமே வெளிவந்தன. தலையங்கம், அரசியல், அறிவியல், சர்வதேச நிகழ்வுகள், சமூக நீதி ஆகியவை குறித்தே கட்டுரைகள் வெளியிடப்பட்டன. அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான ஆங்கிலத்தில் இந்த இதழ் வெளிவந்தது சிறப்பு.

மறைந்த ஆய்வாளர் பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன், இந்த இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்திருக்கிறார்.

## :ப்ளாஷ்பேக்



### புத்தகம் வழங்கி வரவேற்பு!



பொன்மலை குமாரசாமி

1998-ஆம் வருடம் அன்று ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.கழகச் செயலாளராகப் பணியாற்றிய பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சீரிய முயற்சியால், மாவட்டக் கழக அலுவலகம் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் கோவைக்கு வருகை தந்து, புதுப்பிக்கப்பட்ட கழக அலுவலகத்தைத் திறந்து வைத்தார். அப்போது, அவருக்குப் புத்தகம் வழங்கி வரவேற்று புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

**- பொன்மலை குமாரசாமி,**
**முன்னாள் ஊராட்சிச் செயலாளர்,**
**கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம்,**
**கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உரிமைக் குரலுக்குச் சிறை!


2003-ஆம் ஆண்டு சென்னை தலைமைச் செயலகத்தில் இட நெருக்கடி அதிகமாக உள்ளது என்று கூறி, ராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு, அங்கு புதிதாக தலைமைச் செயலகத்தைக் கட்ட அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். அந்தக் கல்லூரிமாணவிகள், போராட்டம் அறிவித்து, கலைஞரிடம் ஆதரவு கோரினர். 'அரசின் விவேக மற்ற செயல்' எனப் பத்திரிகைகள் எழுதின. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கச் சென்ற, இன்றைய முதலமைச்சர் உள்பட கழகத்தினர் மீது பொய்வழக்கு போடப்பட்டு, கடலூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மாநாடு

ர.பிரகாசு **31**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்




# பம்பாயில் பகுத்தறிவுத் தீ!

*பூமிப்பந்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழோடு சேர்த்து ஒலிக்கும் இன்னொரு சொல் பெரியார். அவர் மறைந்த அரைநூற்றாண்டுக்குப் பிறகு புதிதாக ஒலிக்கவில்லை. வாழ்ந்தபோதே அவர் உலகத் தமிழர்களின் மனதில் நீங்காத சிம்மாசனம் இட்டிருந்தார். அதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் 1950-இல் தாராவியில் நடைபெற்ற பம்பாய் மாகாண திராவிடர் கழக இரண்டாவது மாநாடு.*

*09.02.1950 அன்று அன்னை மணியம்மையாருடன் ரயிலில் பம்பாய் புறப்பட்ட தந்தை பெரியார் மறுநாள் இரவு பம்பாயின் தாதர் ரயில் நிலையத்தைச் சென்றடைந்தார். பம்பாய் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டு 'பெரியார் வாழ்க' என முழக்கமிட்டு வரவேற்றனர். 11-ஆம் தேதி தாதரில் இருந்து தாராவியில் உள்ள திராவிடர் கழக அலுவலகத்திற்கு பெரியார் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து மாநாட்டுப் பந்தலுக்கு பெரியார் மோட்டார் வாகனத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.*

**"நான் 6 வருடங்களுக்கு முன்பு இவ்விடம் வந்தபோது நீங்கள் எப்படி இருந்தீர்களோ, அதேநிலையில்தான் இன்றும் உள்ளீர்கள்.**

*நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கருஞ்சட்டை அணிந்து, கையில் கொடியேந்தி ஊர்வலத்தின் முன்பாக எழுச்சி முழக்கம் எழுப்பியவாறு சென்றனர். சாலையின் இருபுறத்திலும் பெரியாரைக் காண மக்கள் கூட்டம் பெரும் அளவில் திரண்டிருந்தது. வழிநெடுகிலும் பெரியாருக்கு மாலைகள் சூட்டப்பட்டன.*

*தாராவியில் உள்ள சட்டவாடி என்னும் இடத்தில் மாநாட்டுப் பந்தல் அழகுற அமைக்கப்பட்டிருந்தது. தாராவி தோல் வியாபாரிகள் சங்கம், 'அண்ணா துரை பகுத்தறிவு நிலையம்', 'காலகில்லா சொற்போர் மன்றம்' உள்ளிட்ட பல மன்றங்கள், அமைப்புகள் சார்பாக பெரியாருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, பண முடிப்புகள் நன்கொடையாக வழங்கப் பட்டன. வரவேற்பை ஏற்று, சிறிதொரு உரையாற்றிய தந்தை பெரியார், "நான் 6 வருடங்களுக்கு முன்பு இவ்விடம் வந்தபோது நீங்கள் எப்படி இருந்தீர்களோ, அதேநிலையில் தான் இன்றும் உள்ளீர்கள். மற்ற பகுதிகளி லெல்லாம் வாழ்க்கைத்தரம் 3, 4 மடங்கு பெருகியிருக்க, உங்களுடைய தரம் அப்படியே உள்ளது. சென்னை மாகாணத்தவரான நீங்கள், அங்கே பிழைக்க வழி யில்லை என்று இங்கே வந்து கஷ்டத்தில் பிழைக்கிறீர்கள். ஆனால், குஜராத்தி, மார்வாரி, பனியாக் கூட்டங்கள் உங்களை விட, 10, 20 மடங்கு அதிகமாக சென்னை மாகாணத்தில் குடி யேறி, ஆன மட்டும் கொள்ளை யடித்து குபேரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். மாட மாளிகைகள் கட்டி மகோன்னத வாழ்வு வாழ்கிறார்கள்" என்று காட்டமாகப் பேசினார்.*

*12-ஆம் தேதி காலையில் தாராவி தாளமுத்து - நடராசன் பந்தலில் மாநாடு தொடங்கியது. நான்காயிரத்திற்கும் குறைவில்லாத மக்கள் கூட்டம். மணியம்மையார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் பிற்பகலுக்கு முன்பே பெரியார் சுமார் இரண்டரை மணிநேரம் அரியதொரு சொற்பொழிவாற்றினார். திருக்குறளின் சிறப்புகளே பெரியார் பேச்சின் பெரும்பகுதியாக இருந்தது. பொதுமக்கள் பெரியாரிடம் கேள்விகள் எழுப்பி விளக்கம் பெறவும் அரைமணி நேரம் அளிக்கப்பட்டது.*

*பிற்பகலுக்குப் பின்னர், பந்தலில் நிற்க இடமில்லாத அளவுக்குக் கூட்டம் அதிகரித்தது. திராவிட நாடு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், சிறைச்சாலைகளில் கம்யூனிஸ்டுகள் மீதான தடியடிக்குக் கண்டனம், உள்ளிட்ட 10 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. மாலையில், திராவிடர் கழகத்தின் இலட்சியங்கள் - கொள்கைகள் - நோக்கத்தை விளக்கி ,மீண்டும் 2 மணி நேரம் உரையாற்றினார் பெரியார். பெரியார் மூட்டிய பகுத்தறிவுத் தீ பம்பாயிலும் கொளுந்துவிட்டு எரிந்தது.*

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **31**

"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...


*இந்தியாவில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகளின் தோற்றம், அவை செயல்படும் விதம், அவர்களால் உருவான விளைவு ஆகிய வற்றைப் பேசும் நூல்கள் பல வெளி வந்துள்ளன.*

*அந்த வகையில், பவள விழா கண்டுள்ள மாநிலக் கட்சியான தி.மு.கழகத்தின் தொடக்கக் கால அரசியலை, கோட்பாட்டு நோக்கிலான ஆய்வாகக் கொண்டு கடந்தாண்டு வெளியான நூல் 'Rule of the Commoner'. மூத்த ஆய்வாளர்கள் ராஜன் குறை கிருஷ்ணன், ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன், வி.எம்.எஸ்.சுபகுணராஜன் ஆகிய மூவரும் இணைந்து இந்நூலை எழுதியுள்ளனர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.*

**தி.மு.க.வின் அரசியல் அதைத்தான் நிகழ்த்தி காட்டியது. அது எவ்வாறு நிகழ்ந்தது, என்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறது, இந்தப் புத்தகம்.**

*இந்த நூல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதல் பகுதி தி.மு.க.வின் அடிப்படைத் தத்துவத்தையும், அது தொடங்கப் பட்டதற்கான வரலாற்றுக் காரணங்களையும் முன்வைக்கிறது.*

*இரண்டாவது பகுதி, மக்கள் நல அரசியல் எப்படி சாத்தியப்பட்டது என்பதையும், அது எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் எந்தெந்த வகையில் கற்பனை செய்யப்பட்டு, மக்களிடம் முன்வைக்கப்பட்டது என்பதையும் விளக்குகிறது.*




*மூன்றாவது பகுதி, அத்தகைய இலட்சியத்தை வென்றெடுப் பதற்கான 'அணித் திரட்டல்' எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதையும், தி.மு.க 1967-இல் ஆட்சியைப் பிடித்ததற்கான காரணங்களையும் விளக்குகிறது.*

*இது தவிர்த்து, திராவிட இயக்க அரசியல் பற்றி, படித்து வருபவருக்கு சிலிர்ப்பை ஏற்படுத்தும் வகையில், முடிவுரை அமைந்துள்ளது. இந்த வகையில் தி.மு.கழகத்தின் 1949 - 1967 வரையிலான அரசியலைப் புரிந்துகொள்ள இந்நூல் இன்றியமையாத ஒன்றாகும்.*

*இதுவரை, தி.மு.கவின் மீதும் திராவிட இயக்கத்தின் மீதும் சுமத்தப்பட்ட அல்லது திணிக்கப்பட்ட எதிர்மறை முன்முடிவுகளான - அடையாள அரசியல், தமிழ்தேசியம் (கலாச்சாரதேசியம்), இனவாதம், மொழிவெறி, வகுப்புதுவேசம் ஆகிவற்றை எல்லாம் இந்நூல் மறுஆய்வுக்கு உட்படுத்துகிறது.*

*இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எல்லாம் தவறவிட்ட அல்லது பெரிதாகக் கண்டுகொள்ளாத தரவுகளை, இந்நூல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறது. குறிப்பாக, அண்ணாவின் **'ஆரிய மாயை', 'பணத்தோட்டம்', 'நீதி தேவன் மயக்கம்', 'சந்திரமோகன்', 'தீ பரவட்டும்'** போன்றவை அந்தக் காலகட்டத்தின் அரசியலை வெளிப்படுத்தும் கோட்பாட்டுப் படைப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிடத் தகுந்த கள ஆய்வுகளும் இந்நூலுக்கு வலு சேர்த்துள்ளன.*

*நூலின் முக்கியமான பகுதி மூன்றாவது பகுதியான 'Grassroot' தான். சாமானிய மக்களை அரசியலின் ஒரு அங்கமாக்குவது எளிதான காரியமல்ல. அதற்கு தீவிர உழைப் பும் பிரச்சாரமும் போராட்டங் களும் தேவைப்பட்டன. அதைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட நெருக்கடிகளும் ஏராளம்.*

# தி.மு.க. நிகழ்த்திய மாற்றம்!


*அன்றைய ஆளும்கட்சியின் காங்கிரஸ் கட்சிக்கு இருந்த பண பலமும் செல்வாக்கும் தி.மு.க.விடம் அன்றைக்கு இருக்கவில்லை, அவர்களிடம் இருந்ததெல்லாம் ஆற்றல்மிகுந்த இளைஞர்களும், 'திராவிட நாடு' என்ற குடியரசை அடைவதற்கான லட்சியமும்தான். ஜனநாயகத்தின் அங்கமாக மக்களை உணர வைப்பதற்கு, சமூகத்தை அரசியல்மயபடுத்து வது இன்றியமையாத ஒன்றாகும். தி.மு.க.வின் அரசியல் அதைத்தான் நிகழ்த்தி காட்டியது. அது எவ்வாறு நிகழ்ந்தது, என்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறது, இந்தப் புத்தகம்.*

**...வாசிப்போம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**617**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131